# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 18.09.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல்ஜுமுஆவின் 10 முதல் 12 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

***பொருள்:*** *நம்பிக்கை கொண்டவர்களே! வெள்ளிக்கிழமைகளில் தொழுகைக்காக அழைக்கப்பட்டால், நீங்கள் அல்லாஹ்வை நினைவு கூருவதற்கு விரைந்து செல்லுங்கள். (மற்றெல்லா) வியாபாரங்களையும் விட்டு விடுங்கள். நீங்கள் அறிந்திருப்பின் இது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும்.*

*தொழுகை நிறைவேற்றப்பட்டதும், பூமியில் பரவிச் சென்று, அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள். நீங்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வை மிகுதியாக நினைவு கூருங்கள்.*

*ஆனால் அவர்கள் வியாபாரத்தையோ, கேளிக்கைகளையோ காணும் போது, அதன்பால் ஈர்க்கப்பட்டு, உம்மை (தனித்து) நிற்க வைத்து விடுகின்றனர். நீர் கூறுவீராக: அல்லாஹ்விடமுள்ளது கேளிக்கையை விடவும், வியாபாரத்தை விடவும் மிகச்சிறந்ததாகும். அல்லாஹ் மிகச்சிறந்த உணவளிப்பவனாவான். (62:10-12)*

முதலில் நான் உங்களுக்கு ஒன்றை கூற விரும்புகிறேன். இதைக் கூறும்போது நான் அல்லாஹ்வின் புகழை எடுத்துரைக்கிறேன். இந்த ரமலானில் எல்லா வெள்ளிக்கிழமையும் அல்லாஹ்வின் அருளால் பள்ளிவாசல் நிரம்பிவிடும் அளவிற்கு தொழுகைக்கு வந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. பள்ளிவாயிலின் கதவை திறந்து வெளியிலுள்ள வராண்டாவிலும் தொழ ஏற்பாடு செய்ய வேண்டியது ஏற்பட்டது. ஏதாவது சிறப்பான நிகழ்ச்சியின்போது தான் இவ்வளவு கூட்டம் இருக்கும். அல்லது ரமலானின் கடைசி ஜுமுஆவாகிய ஜுமுஅத்துல் விதாவின்போதுதான் பொதுவாக கூட்டம் அதிகமாக இருக்கும்.

ஜுமுஆவிற்கென்று சிறப்பான ஏற்பாடுகள் செய்து தொழுவதற்காக வருவதுதான் உண்மையான ஜுமுஅத்துல் விதாவாகும் என்பதை ஒவ்வொரு அஹ்மதியும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஜுமுஆவின் போது நாம் எல்லா வேலைகளையும் விட்டு விட்டு அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப பள்ளிவாயிலுக்கு வர வேண்டும். இதன் மூலம் ஜுமுஆவிற்கென்று அல்லாஹ் சிறப்பாக வழங்கியுள்ள அருட்களை நாம் பெற வேண்டும். பரக்கத்துகளைப் பெற்ற பிறகு அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப உலக வேலைகளில் ஈடுபடுவதற்காக செல்லும் போது நாம் அல்லாஹ்வை நினைவு கூர்வதை கைவிடக் கூடாது. அதோடு இபாதத்துகளின் பிற நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து வர வேண்டும். இன்று நாம் ஜுமுஆவை தொழுதுவிட்டு பள்ளிவாயிலை விட்டு வெளியே செல்வது, அடுத்து வருகின்ற ஜுமுஆவினை வரவேற்பதற்கான ஆசையை உருவாக்குவதாக (அது) இருக்க வேண்டும். ரமலானின் கடைசி ஜுமுஆ என்று கூறப்படுகின்ற ஜுமுஅத்துல் விதா வருடத்தில் ஒரு முறையே வருகிறது. இவ்வாறு வருடத்தில் ஒருமுறை வருகின்ற ஜுமுஅத்துல் விதா நமக்குத் தேவையில்லை. அல்லாஹ்வின் அச்சத்தை உண்மையாக உள்ளத்தில் கொள்ளாதவர்கள் இந்த ஜுமுஆவைத் தவிர வருடத்தில் 51 -52 ஜுமுஆக்கள் இன்னும் இருக்கின்றது என்பதை மறந்து விடுகிறார்கள். ரமலானின் கடைசி ஜுமுஆவை வரவேற்பது எவ்வளவு அவசியமோ அதே அளவு பிற ஜுமுஅக்களையும் வரவேற்பதும் அவசியமானதாகும்.

இன்றைய ஜுமுஆ ரமலானின் கடைசி ஜுமுஆவாகும. வருடம் முழுவதும் ஜுமுஆ தொழுவதில் சோம்பேறித்தனம் காட்டி வந்த மக்களுக்கு இந்த ஜுமுஆ ஒரு பாடம் புகட்டுகின்ற ஜுமுஆவாக இருக்கட்டும்.

இந்த ஜுமுஆவை முடித்தவுடன் இனி அடுத்த வருடம் வருகின்ற ரமலானின் கடைசி ஜுமுஆவை வரவேற்பவர்களாக இருப்பதற்கு பதிலாக அடுத்த வாரம் வருகின்ற ஜுமுஆவை வரவேற்பவர்களாக இருப்போம். இந்த ஜுமுஆவிற்குப் பிறகு நாம் நமது தீமைகளையும், பலவீனங்களையும், சோம்பேறித்தனங்களையும், குறைகளையும் மறந்து விடக்கூடாது. மாறாக, நாம் எப்போதும் இதை நினைவில் கொண்டவாறு நமது சீர்திருத்தத்தின் பக்கம் முன்னேறுபவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால் இங்கு பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் ரமலான் மாதம் முழுவதும் ஜுமுஆவில் நமக்குத் தென்பட்ட எண்ணிக்கையைப் போன்று உலகின் பிற இடங்களிலும் தென்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். ஜுமுஆவிற்காக அதிக எண்ணிக்கையில் வர வேண்டும் என்ற இந்த நல்ல எண்ணம் ஜமாஅத்தில் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும் என்று நான் துஆ செய்கிறேன். ஒவ்வொரு அஹ்மதியும் இதற்காக துஆ செய்ய வேண்டும். ஏனென்றால், இக்காலகட்டத்தில் அஹ்மதிகளின் மீது இருக்கின்ற மிகப்பெரிய பொறுப்பு இதுவாகும்.

நான் ஓதிய வசனமும் நமக்கு இதைத்தான் வலியுறுத்துகிறது. நான் ஓதிய வசனம் சூரா ஜுமுஆவின் கடைசி ருகூவின் வசனங்கள் ஆகும். இந்த வசனம் **யா அய்யுஹல்லதீன ஆமனூ** – ஈமான் கொண்ட மக்களே! என்று தொடங்குகிறது. ஜுமுஆவிற்காக நீங்கள் அழைக்கப்பட்டால் ஜுமுஆவின் தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கம்தான் உங்களுக்கு இருக்க வேண்டும். மற்ற எல்லா வேலைகளும் இரண்டாம்பட்சமாகி விடுகிறது. இந்த வசனத்திற்கு முந்தைய வசனங்களைப் பார்த்தால், அதில் யூதர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. யூதர்களின் மீது தவ்ராத் இறக்கப்பட்டது. அவர்கள் அதன்படி செயல்படவில்லை. அவ்வாறே வெளிப்படையான பல முன்னறிவிப்புகள் இருந்தும் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை மறுத்தார்கள். இவர்கள் மீது இறைவன் இறக்கிய போதனைகளை, இவர்கள் மறந்து விட்டதும், அதன்படி செயல்படுவதை நிறுத்தி விட்டதுமே இந்த நிராகரிப்புக்குக் காரணமாகும். அவர்கள் தமது வேதத்தின்படி செயல்படவில்லை என்று இந்த வசனங்களில் இறைவன் குறிப்பிட்டு அவர்களின் நிலை கழுதையின் மீது புத்தகத்தின் சுமையை ஏற்றி விட்டதற்கு சமமாகி விட்டது என்றும் கூறுகிறான்.

யூதர்களுக்கு இறைவணக்கத்திற்கென்று இறைவன் ஒரு நாளை குறிப்பிட்டிருந்தான். அது வாரத்தில் ஒரு நாளாகும். இந்த நாளன்று இறைவனை சிறப்பாக வணங்க வேண்டும் என்ற கட்டளை அவர்களுக்கு இடப்பட்டிருந்தது. அதையும் அவர்கள் நாளடைவில் மறந்து விட்டார்கள். சபத் நாள் அவர்களுக்கு இறைவணக்கம் செய்ய வேண்டிய நாளாக இருந்தது. ஆனால் அந்த நாளின் போது இறைவனுக்கு விருப்பமில்லாத பல காரியங்களை அவர்கள் செய்து வந்தார்கள். சபத் என்பதை சனிக்கிழமைக்கு கூறுவார்கள். இதற்கு இன்னும் பல அர்த்தங்கள் இருக்கின்றன.

ஆக, யூதர்களுக்கு சனிக்கிழமையாகிய சபத் நாள பரக்கத்திற்குரிய நாளாகும். இந்த நாளில் இவர்களுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அதை தமது சூழ்ச்சியால் மீறி விட்டனர். இது தொடர்பாக திருக்குர்ஆனில் இவ்வாறு வருகிறது.

*சபத் விஷயத்தில் வரம்பு மீறியவர்களை நீங்கள் நன்றாக தெரிந்துள்ளீர்கள். (2:66)*

இவர்களின் வரம்பு மீறுதலின் காரணமாக இவர்களுக்கு தண்டனையும் கிடைத்தது. இவ்வாறு வழிதவறிய யூதர்களின் நிலையை எடுத்துக்கூறி ஈமான் கொண்ட மக்களே! (62:10) என்று கூறுவதன் மூலம் முஸ்லிம்களுக்கு ஜுமுஆவின் உரிமையை நீங்கள் சரியாக வழங்க வேண்டும் என்று கவனமூட்டப்பட்டுள்ளது. நீங்கள் இந்த புனித நாளின் உரிமையைப் பேணத் தவறினால் இறைவனின் முன் நீங்களும் தண்டனையைப் பெறுபவர்கள் ஆகிவிடுவீர்கள் என்ற எச்சரிக்கையும் இதில் உள்ளது.

எல்லா சமுதாயத்தைப் போன்றும் முஸ்லிம்களுக்கு ஒரு சபத் நாள் உள்ளது. அது வெள்ளிக்கிழமையாகும். இந்த நாளை சிறப்பாக பாதுகாத்து இதற்குரிய உரிமையையும், கடமையையும் செலுத்த ஒவ்வொரு முஸ்லிமும் முயற்சி செய்ய வேண்டும். துஆவும் செய்ய வேண்டும்.

ஜுமுஆ தொழுகைக்காக அழைக்கப்படும் போது மூஃமின்கள் தமது எல்லா வேலைகளையும், வியாபாரங்களையும் உடனே விட்டு விட்டு ஜுமுஆ தொழுவதற்காக பள்ளியை நோக்கி செல்ல வேண்டும். இமாமுடைய குத்பாவை கேட்பதற்காக உடனடியாக பள்ளிக்குச் செல்ல வேண்டும். இவ்வாறு இந்த நாளின் புனிதத் தன்மையை நாம் பேண வேண்டும்.

இன்றயை நாட்களில் உலக சூழ்நிலையில் பாங்கு சப்தம் எங்கள் காதுகளில் விழவில்லை என்று யாராவது சாக்குப்போக்கு சொன்னால், இக்காலகட்டத்தில் அல்லாஹ் இதற்காக வேறு வழியில் ஏற்பாட்டை செய்துள்ளான். கடிகாரம் தந்திருக்கிறான். போன்களில் மணி அடிப்பதற்குப் பதிலாக பல்வேறு குரல்களை மக்கள் பதிவு செய்து வைத்துக் கொள்கிறார்கள். அது அடிக்கும் போது நமக்கு கேட்கிறது. குறிப்பிட்ட நேரத்தில் பாங்கு சப்தம் அதில் கேட்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா முடியாதா என்பது எனக்குத் தெரியாது. எனக்கு இதில் அனுபவம் இல்லை. அவ்வாறு செய்ய முடியும் என்றால் பாங்கு சப்தத்தை அதில் பதிவு செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு இரண்டு பலன்கள் இருக்கிறது. ஜுமுஆவிற்காக பாங்கு சப்தம் கேட்கும் போது தொழுகையின் பக்கம் கவனம் ஏற்படும். அதே சமயம் மக்களுடைய கவனமும் இதன் பக்கம் திரும்பும். பாங்கு சப்தம் மக்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு காரணமாக அமையும். இதுவும் தப்லீகின் வழிகளை நமக்கு திறந்து விடும். இன்னும் பல நன்மைகள் இதில் இருக்கின்றன. சாதாரண அலாரத்தின் ஓசையும் நமக்கு தொழுகையை நினைவூட்டும்.

எவ்வாறு இருந்தபோதிலும் ஜுமுஆவின் முக்கியத்துவத்தை ஒருபோதும் மறந்து விடக்கூடாது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இதுபற்றி கூறும்போது,

இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட சமுதாயம் தான் **யா அய்யுஹல்லதீன** - ஈமான் கொண்டவர்களே! (62:10) என்று அழைக்கப்படத் தகுதியுடையதாக இருக்கிறது. பிற முஸ்லிம்களும் இதில் அடங்குவார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எனினும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு சூரா ஜுமுஆவிற்கு ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. எனவே சூரா ஜுமுஆவில் கூறப்பட்டுள்ள விஷயங்களை ஏற்றுக்கொள்வது அஹ்மதிகளுக்கு குறிப்பாக மிகவும் அவசியமாகும் என்று கூறினார்கள்.

பிற முஸ்லிம்கள், முஸ்லிம் என்று அழைக்கப்பட்டும், ஈமான் கொண்டவர்கள் என்று அழைக்கப்பட்டும், மூஃமின்கள் என்று அழைக்கப்பட்டும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மறுத்ததன் காரணமாக,

நீங்கள் வேதத்தில் ஒரு பகுதியில் நம்பிக்கைக் கொண்டு, மற்றொரு பகுதியை மறுக்கின்றீர்களா? (2:86) என்ற கேள்விக்கு முற்றிலும் பொருந்துகிறார்கள். திருக்குர்ஆனின் தொடக்கம் முதல் முடிவு வரை எல்லா கட்டளைகளின் மீதும் நம்பிக்கை கொள்பவர்தான் உண்மையான மூஃமின் ஆவார். ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் முதல், வாக்களிக்கப்பட்ட நபியாகிய ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் வரை எல்லா நபிமார்களின் மீதும் நம்பிக்கை கொள்பவர்தான் உண்மையான மூஃமின் ஆவார்.

எனவே இந்த நாளை நாம் மதிக்க வேண்டும் என்பது நம்மீது உள்ள மிகப் பெரிய பொறுப்பாகும். இந்த நாளில் வியாபாரங்களை விட்டுவிட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலகட்டத்திற்கு வியாபாரத்தோடும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. எல்லா விதமான வியாபாரத்திலும் விரிவாக்கம் ஏற்பட்டு விட்டது. Stock Market மூலம் உலக வர்த்தகத்தின் ஏற்ற இறக்கம் பற்றி நாம் அறிந்து கொள்கிறோம். இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் மிகவும் Busy ஆக இருப்பார்கள். பல்வேறு

கம்பெனிகளின் பங்குகளின் விலையின் ஏற்ற இறக்கத்தை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருப்பார்கள். ஒரு நொடிப் பொழுதுகூட கண்ணை சிமிட்டினால் அல்லது கவனம் மாறினால் அவர்களின் இந்த ஒரு நொடியின் கவனக்குறைவு அல்லது கண் சிமிட்டிய நேரம் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தி விடும். இதுபோன்று மண்டிகளில் சின்னச்சின்ன வியாபாரங்கள் உள்ளன. இந்த வகையான வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எல்லாருமே, அவர் வியாபாரியாக இருந்தாலும் சரி, சம்பளத்திற்கு வேலை செய்பவராக இருந்தாலும் சரி இதற்கு முன் எந்த காலத்திலும் வியாபாரத்தில் இந்த அளவு அபிவிருத்தி இருந்ததேயில்லை. இவ்வளவு organised ஆக இருந்ததேயில்லை. ஒவ்வொரு நாளும் electronic ன் வழிமுறைகள் இதில் பயன்படுத்த வர வர வியாபாரத்தின் போது நேரத்தின் முக்கியத்துவமும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

எவ்வளவு பெரிய வியாபாராமாக இருந்தாலும் சரி, உங்களிடம் நேரம் எவ்வளவு குறைவாக இருந்த போதிலும், ஜுமுஆ தொழுகையோடு ஒப்பிடுகையில் இது ஒரு பொருட்டே அல்ல. நீங்கள் நேரத்தை ஒதுக்குவதால் உங்களுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும் அதை எல்லாம் முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விட்டு ஜுமுஆவிற்கு தொழுகைக்காக வருவது எல்லா நிலையிலும் கட்டாய கடமையாகும். சின்னஞ்சிறிய வியாபாரங்கள் செய்பவர்கள் எந்தவொரு சாக்குபோக்கும் சொல்லவே முடியாது.

நாம் அஹ்மதிகள் ஆவோம். இக்காலத்தின் உண்மையான மூஃமின்கள் ஆவோம். நாம் நமது ஜுமுஆக்களைப் பாதுகாத்து வர வேண்டும். அப்போதுதான் நாம் இக்காலத்தின் நேர்வழி காட்டுபவரிடமிருந்து நேர்வழியை உண்மையான முறையில் பெற முடியும். அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பெற்றவாறு அவனது விருப்பத்தைப் பெறுபவர்களாக இருக்க முடியும். ஜுமுஆவின் முக்கியத்துவத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்கு விளக்கி யூதர்களிடமிருந்து நம்மைப் பிரித்துக் காட்டியுள்ளார்கள். ஒரு அறிவிப்பில் வருகிறது.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் கேட்டேன். கியாமத் நாளன்று நாம் ஆகரீன்களாக இருந்தபோதும் ஸாபிகீன்களாக இருப்போம். ஆனால் அவர்களுக்குத்தான் முதலில் வேதம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு ஒரு நாள் கடமையாக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் அதில் கருத்து வேறுபாடு கொண்டனர். ஆனால் இறைவன் நம்மை இதன் பக்கம் சரியாக வழிநடத்தியுள்ளான். இனி மக்கள் நம்மையே பின்பற்றுவார்கள். யூதர்கள் (வெள்ளிக்கிழமைக்கு) ஒரு நாள் கழித்தும், கிறித்தவர்கள் அதன் மறுநாளும் நம்மை பின்பற்றுவார்கள். (ஹதீஸ் – புகாரி)

இந்த ஹதீஸை சற்று விளக்குவது அவசியமாகும். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் ஹஸ்ரத் செய்யது பரீவுல்லாஹ் ஷா சாஹிப் (ரலி) அவர்களிடம் புகாரியின் சில ஹதீஸ்களை தொகுத்து அதற்கு விளக்கம் எழுதும் வேலை ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த காலத்தில் அந்த விளக்கவுரை நூல் வடிவில் வெளிவந்தது. அதன் பிறகு மிக நீண்ட காலம் வரை இது வெளியிடப்பட முடியாமல் இருந்தது. இப்போது Noor Fund Foundation ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கண்காணிப்பின் கீழ் ஹதீஸ்களின் நூல்கள் ஜமாஅத்தில் வெளியிடப்பட்டுள்ளது. முஸ்லிம் மற்றும் புகாரியின் பல பாகங்கள் வெளியிடப்பட்டு விட்டன. ஷா சாஹிப் எழுதிய விளக்கவுரையில் இந்த ஹதீஸின் விளக்கமும் இருக்கிறது. ஷா சாஹிப் இந்த ஹதீஸிற்கு மிக நீண்ட விளக்கம் தந்துள்ளார்கள். அதில் ஜுமுஆ தொழுகையின் கடமை மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றிய சில விளக்கங்களை எழுதியுள்ளார்கள். சில மார்க்க சட்ட அறிஞர்கள் ஜுமுஆ தொழுகையை ஃபர்ளே கஃபாயா என்று நம்பி வந்தார்கள். ஃபர்ளே கஃபாயா என்றால் ஒரு சில பேர் ஜுமுஆவைத் தொழுதாலே போதும். எல்லாரும் இதில் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்பது அவசியம் இல்லை என்பதாகும்.

**ஷா** சாஹிப் தனது விளக்கவுரையில் இந்தக் கொள்கை ஒரு தவறான கொள்கை என்று நிரூபித்துள்ளர்கள். இது ஃபர்ளே கஃபாயா இல்லை. மாறாக, பிற தொழுகைகள் கடமையாக்கப்பட்டிருப்பது போன்றே இதுவும் கடமையாகும் என்று நிரூபணம் செய்துள்ளார்கள். அதன் பிறகு **சபத்** என்ற சொல்லை அகராதியிலிருந்து விவாதத்திற்கு எடுத்து வைத்து யூதர்களின் வரலாறு மற்றும் பழக்கவழக்கங்களை வைத்து இந்த ஹதீஸில் வந்திருப்பது போன்று வெள்ளிக்கிழமைதான் யூதர்களுக்கு **சபத்** நாளாக இருந்தது என்று நிரூபித்துள்ளார்கள். வெள்ளிக்கிழமையின் சில பகுதி சபத் நாளில் சேர்க்கப்பட்டிருக்கலாம். இதுவே நாளடைவில் சனிக்கிழமையாக மாறியும் இருக்கலாம். ஆக இது தொடர்பாக **ஷா** சாஹிப் அவர்களின் சில விளக்க உரையை நான் எடுத்து வைக்கிறேன்.

லிஸானுல் அரப் என்ற அகராதி நூலின் அடிப்படையில் சபத் என்றால் வேலையை விட்டு விட்டு ஓய்வு எடுப்பது என்று பொருளாகும். மார்க்க வழக்கத்தின்படி எல்லா வேலைகளையும் முற்றிலும் விட்டு ஒதுங்கி இறை வணக்கத்தில் ஈடுபடுவது என்று பொருள் ஆகும். ஒரு நாள் முழுவதும் இறைவனை வணங்க வேண்டும் என்பது இஸ்ரவேல் மக்களுக்கு கடமையாக இருந்தது. இதற்கான கட்டளை பைபிளில் காணப்படுகிறது. (அதி. 31:14-16)

இந்த கட்டளையை மக்கள் மீறினார்கள். இதன் காரணமாக அவர்களுக்கு தண்டனை கிடைத்தது.

**ஷா** சாஹிப் எழுதுகிறார்கள்: வெள்ளிக்கிழமை பனீ இஸ்ராயீல் சமுதாயத்திற்கு விதிக்கப்பட்ட அளவுக்கு கட்டுப்பாடுகள் முஸ்லிம்களுக்கு விதிக்கப்படவில்லை. இந்தக் கட்டளையை இறைவன் திருக்குர்ஆனில் இவ்வாறு இடுகிறான்.

இந்தக் கட்டளையை மீறியவர்களுக்குத்தான் சபத் ஆகும். அதாவது வேலைகள் அனைத்தையும் விட்டு விட்டு ஒரு நாள் முழுவதும் இறைவணக்கத்தில் ஈடுபட வேண்டும் என்ற கட்டளை விதிக்கப்பட்டிருந்தது. (6:125)

ஏழாவது நாள் இறைவணக்கத்திற்காக நியமிக்கப்பட்டிருந்தது என்று இந்த வசனத்திற்கு பொருள் இல்லை. (அப்படியே பொருள் கொண்டாலும்) கிறித்தவர்களின் பழக்கவழக்கங்களை பின்பற்றி சனிக்கிழமைக்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமை இறை வணக்கத்திற்கான நாள் என்று கொண்டாடினார்கள் என்றால் யூதர்கள் வெள்ளிக்கிழமையை மாற்றி சனிக்கிழமையாக ஆக்கி இருக்கலாம். யூதர்கள் நாடுகடத்தப்பட்ட காலத்தில் பாபுல் காரர்களுக்கும், பாரசீகர்களுக்கும் மத்தியில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்ததன் காரணமாக அவர்களுடைய இணைவைக்கும் கொள்கைகளையும் சடங்குகளையும் யூதர்கள் பின்பற்றினார்கள் என்பது வரலாற்றின் மூலமும் பிற சம்பவங்களின் மூலமும் நிரூபணம் ஆகிறது. அவர்கள் கடைபிடித்த மு**ஷ்**ரிக்கான கொள்கைகள் யூதர்களை வெகுவாகப் பாதித்தது. பழைய காலத்து யூதர்கள் வெள்ளிக்கிழமைக்கு ஒரு புனிதத்தன்மையை வைத்திருந்தார்கள். வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய இரண்டு தினங்களிலும் எந்த ஒரு வழக்கத்தின் காரணமாகவும் யூதர்களை நீதிபதி நீதிமன்றத்தில் ஆஜராகும் படி தீர்ப்பு வழங்குவது சட்டப்படி தடுக்கப்பட்டிருந்தது என்று ரோமானிய தீர்ப்புகள் மற்றும் சட்டங்களை எழுதுவதில் மிகவும் பிரபலமான வரலாற்று ஆசிரியர் யூசுஃப் ஆஸ் என்பவர் தனது நூலில் எழுதியுள்ளார்.

சபத் நாளுக்கான ஏற்பாட்டை வேறு நாள் அதாவது வெள்ளிக்கிழமை எட்டாவது மணி நேரத்தில் அதாவது 2.30 மணி அளவில் குர்பானி கொடுத்து இந்த நாள் ஆரம்பமாகும். ஒன்பதாம் மணி நேரத்தில் அதாவது ஏறக்குறைய 3.30 மணிக்கு குர்பானி கொடுத்து இந்த நாளை முடிப்பார்கள். அதன பிறகு குளித்து சுத்தமாகி, சுத்தமான ஆடைகள் அணிந்து சனிக்கிழமையை வரவேற்பார்கள்.

ஆக, யூதர்களின் பார்வையிலும் வெள்ளிக்கிழமை புனிதமான நாளாகவே இருந்தது. ஒரு வகையில் வெள்ளிக்கிழமையும் சபத் நாளாகவே கருதப்பட்டது. எனவே இஸ்லாமிய வரலாற்று அறிஞர்களின் மரபுப்பழக்கம் உண்மையைக் கொண்டதாக விளங்குகிறது. வெள்ளிக்கிழமைக்கு அரூபா என்ற பெயர் உண்டு என்ற மரபு உண்மையில் பழைய அரபி மக்கள் வேதம் வழங்கப்பட்டவர்களிடமிருந்து இந்தப் பெயரைப் பெற்றார்கள். உரூபா என்ற பெயரின் அடிப்படைச் சொல் (Root word) இன்னும் யூதர்களிடம் இருந்து வருகிறது. சபத் நாளின் இறைவணக்கங்கள் வெள்ளிக்கிழமையில் ஆரம்பமாகிறது. இந்த இரண்டு சாட்சியங்களும் உண்மை நிலையை தெளிவுபடுத்துகின்றன.

யூதர்கள் சபத் கட்டளையில் மிகவும் அதிக அளவில் கருத்து வேறுபாடு கொண்டார்கள். இதன் காரணமாக இதை அதிகமாக மீறி வந்தார்கள். யூதர்களின் நபிமார்கள் கூட யூதர்களுக்கு ஏற்பட்ட அவமானம், தலை குனிவு, தண்டனை ஆகியவற்றிறகு சபத் நாளின் புனிதத் தன்மையை களங்கப்படுத்தியதுதான் காரணம் என்று கூறியுள்ளார்கள்.

சபத் நாளின் களங்கம் தான் பனீஇஸ்ராயீலின் மக்களின் அழிவிற்கு காரணமாக அமையும் என்று ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் முன்னறிவிப்பு செய்தார்கள். அந்த முன்னறிவிப்பு பைபிளில் வந்துள்ளது.

ஆக, இவ்வனைத்து சம்பவங்களும் வரலாற்று உண்மைகளும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய மேற்கூறப்பட்ட ஹதீஸை மெய்ப்பிக்கின்றன. ஹதீஸில் இவ்வாறு வருகிறது. பனீ இஸ்ராயீல் (மக்கள்) அதை மீறினார்கள். ஆனால் இறைவன் நமக்கு நேர்வழி காட்டியுள்ளான். எனவே 1500 வருடங்கள் கழிந்த பின்னரும் இன்று வரை முஸ்லிம்கள் எங்கிருந்தாலும் ஜுமுஆவிற்கான ஏற்பாட்டை எப்படியாவது செய்து விடுகிறார்கள். குறைவான எண்ணிக்கையில் இருந்தாலும் முழு ஊரும் ஒன்றுகூடாவிட்டாலும் முஸ்லிம்களின் பெரும் எண்ணிக்கை ஜுமுஆவிற்காக கண்டிப்பாக ஒன்றுகூடுகிறார்கள். எதுவரை இவ்வாறு ஒன்றுகூடி வருவார்களோ அதுவரை இறை அருள் கிடைத்துக் கொண்டிருக்கும்.

இந்த காலத்திற்கு ஜுமுஆவோடு ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. எனவே அஹ்மதிகள் குறிப்பாக இந்த நாளை பேணி வர வேண்டும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியது போன்று இறைவன் நமக்கு இதன் பக்கம் மிகச்சரியாக வழிகாட்டியுள்ளான். இறைவனின் இந்தக் கட்டளையை சரிவர பேணுவதற்காக நாம் மிகவும் கவனத்தோடு முயற்சி செய்வது நமது தலையாய கடமையாகும். இக்கட்டளையை நாம் மீறி இறைவனின் கோபத்திற்கு ஆளாகி விடக்கூடாது. நாமும் சுதாகரிப்போடும் விழிப்போடும் இருக்க வேண்டும் என்பதற்காக இறைவன் கடந்த நபிமார்களின் சம்பவங்களை நமக்கு எடுத்துக் கூறுகிறான். யூதர்களின் சம்பவங்களை கூறியுள்ளான்.

ஷா சாஹிப் வரலாற்றின் வாயிலாக நிரூபித்துள்ளது போன்று, யூதர்களின் இறைவணக்கங்கள் வெள்ளிக்கிழமையில்தான் சிறப்பாக ஆரம்பித்தார்கள் என்றாலும் அவர்கள் அதை கைவிட்டுதான் இருப்பார்கள்.

ஹதீஸ்களிலிருந்தும் இந்த நாளின் முக்கியத்துவம் நிரூபணம் ஆகின்றது. யூதர்கள் இந்த நாளை ஏன் கைவிட்டிருப்பார்கள் என்றால் இந்த நாளில் அல்லாஹ்வின் அருள் இருக்கிறது. அல்லாஹ்வின் இந்த அருள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் உம்மத்திற்கும் இறைவன் சிறப்பாக ஆக்கியுள்ளான். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இந்த நாளின் முக்கியத்துவத்தைப் பற்றி மிகவும் தெளிவாக நமக்கு விவரித்துள்ளார்கள்.

இந்த நாள் நமக்கு ஏன் சிறப்பிற்குரிய நாளாகும்? இந்த நாளில் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் பிறந்தார்கள். இந்த நாளில்தான் அவர்கள் மரணமும் அடைந்தார்கள். ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு

நமது ஆன்மீக வாழ்வில் ஒரு கண்ணியம் இருக்கிறது. இதுபற்றி இறைவன் திருக்குர்ஆனில் மிகவும் தெளிவாக கூறுகிறான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலகட்டத்திலும் இதற்கு ஒரு கண்ணியம் இருக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் ஆதம் என்று பெயர் வைத்துள்ளான். இக்காலகட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் தான் மார்க்கம் மீண்டும் உயிர்பெறுகின்ற வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எனவே ஜுமுஆவைப் பேணுவது அஹ்மதிகளுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும. அப்போதுதான் நமது பாதை மிகவும் சரியானதாக இருக்கும். அப்போதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தோடு இறைவன் வழங்கியுள்ள பரக்கத்துகளுக்கு நாம் வாரிசாக முடியும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஜுமுஆவின் முக்கியத்துவம் பற்றி கூறியுள்ள விஷயங்கள் தொடர்பாக சில ஹதீஸ்களை எடுத்து வைக்கிறேன்.

ஹஸ்ரத் அவ்ஸ் பின் அவ்ஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நாட்களிலேயே உங்களுக்கு சிறந்த நாள் வெள்ளிக்கிழமையாகும். இந்த நாளன்று ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். இந்த நாளில் தான் மரணம் அடைந்தார்கள். இந்தநாளில் சூர் – எக்காளம் ஊதப்படும். இந்த நாளில் மயக்கம் ஏற்படும். எனவே இந்த நாளில் என் மீது அதிகமாக சலவாத் ஓதுங்கள். ஏனென்றால் இந்த நாளில் நீங்கள் என் மீது ஓதுகின்ற சலவாத் என் முன்னால் கொண்டு வரப்படும் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இப்னு மாஜாவில் இன்னொரு ஹதீஸ் வருகிறது. ஹஸ்ரத் அபூலுபாபா பின் முன்ஸிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஜுமுஆ நாள் (வெள்ளிக்கிழமை) தினங்களின் தலைவன் ஆவான். இது அல்லாஹ்வின் பார்வையில் எல்லாவற்றிற்கும் அதிகமான கண்ணியத்திற்குரியதாகும். இந்த நாள் அல்லாஹ்வின் பார்வையில் யவ்முல் அழ்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்) மற்றும் யவ்முல் ஃபித்ர் (நோன்புப் பெருநாள்) ஆகியவற்றை விட மிகச் சிறந்ததாகும். இந்த நாளுக்கு ஐந்து சிறப்புகள் உள்ளன.

1) அல்லாஹ் இந்த நாளில் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களைப் படைத்தான்.
2) இந்த நாளில் அல்லாஹ் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களைப் பூமிக்கு இறக்கினான்.
3) இந்த நாளில் அல்லாஹ் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு மரணத்தை வழங்கினான்.
4) இந்த நாளில் ஒரு சிறப்பான நேரம் உண்டு. அப்போது இறை அடியார் ஹராமானதைத் தவிர அல்லாஹ்விடம் எதை வேண்டினாலும் இறைவன் அவருக்கு அதை தந்து விடுகிறான்.
5) இந்த நாளில் தான் கியாமத் வரும்.

இந்த நாளுக்கு வானவர்கள், பூமி, காற்று, மலைகள், கடல் ஆகியவை அஞ்சுகின்றன.

இந்த ஹதீஸ்களின் மூலம் இந்த நாளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது என்பது நிரூபணம் ஆகின்றது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த நாளில் என் மீது அதிகமாக சலவாத் ஓதுங்கள் என்று கூறினார்கள். பொதுவாக ஒவ்வொரு நாளும் சலவாத் ஓத வேண்டும். ஆனால் வெள்ளிக்கிழமையின் போது இதை அதிகமாக கவனத்தோடு அவர்களின் மீது சலவாத் ஓதுவதற்கும் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

**திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:**

நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கிறான். மலக்குகளும் இவருக்காக பிரார்த்தனை செய்து கொண்டே இருக்கின்றனர். எனவே நம்பிக்கை

கொண்டவர்களே! இந்த நபியின் மீது அருள் பொழியுமாறும் சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறும் நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள். (33:57)

இந்த நாளின் போது துஆ ஏற்றுக் கொள்ளப்படும் நேரம் ஒன்று வரும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது சலவாத் ஓதுமாறு இறைவன் நமக்குக் கற்றுத் தந்த துஆவை நாம் செய்து வந்தால் பிற நேரங்களில் நாம் செய்து வந்த துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். எனவே, வெள்ளிக்கிழமையின் போது சலவாத் ஓதுகின்ற முறையை நாம் குறிப்பாக செய்து வர வேண்டும். முஸ்லிம்களின் மீது இறைவன் பல்வேறு அருட்கொடைகளை புரிந்துள்ளான். அதில் ஒன்று, ஜுமுஆவிற்கும் பிறகு நாம் நமது உலக வேலைகளில் ஈடுபடுவதற்கு இறைவன் நமக்கு அனுமதி வழங்கியுள்ளான். வெள்ளிக்கிழமை முழுவதும் இறைவனை வணங்க வேண்டும். வேறு வேலைகள் எதுவும் செய்யக்கூடாது என்று இறைவன் கூறவில்லை. ஆனால் இந்த அனுமதிக்கு ஒரு நிபந்தனை உள்ளது. ஒன்று, அல்லாஹ்வை நினைவு கூர்வதை மறக்கக் கூடாது. இரண்டாவது நிபந்தனை, அல்லாஹ்வின் அருளைத் தேட வேண்டும். (62:11). திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள வரிசைப்படி பார்த்தால் அல்லாஹ்வின் அருளைத் தேட வேண்டும். அவனை நினைவு கூற வேண்டும் என்று வந்துள்ளது. இதை நன்றாக நினைவில் கொண்டவாறு வேலை செய்தால், இந்த வேலையை நான், எனது அருளைத் தேடுங்கள் என்று கூறியதன் காரணமாக கட்டளையிட்டதன் காரணமாக செய்கிறேன் என்ற எண்ணம் இருந்தால் வெறும் உலக ஆசைக்காக நான் வேலை செய்யாமல், எனது வேலை, எனது வியாபாரம் அனைத்தும் இறையச்சத்தின் பால் கொண்டு செல்கின்ற வகையில் அமைய வேண்டும். இது உலக வேலைதானே. எனவே இதில் ஏமாற்றுவதல் தவறில்லை என்று நினைத்து விடக் கூடாது. மாறாக, இறைவனின் அருட்கொடையைப் பெற வேண்டும் என்றால் நமது எல்லா காரியங்களும் தூய்மையாக, சுத்தமாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக இறைவன் கூறுவது, இறைவனை அதிகமாக நினைவு கூறுங்கள் என்பதாகும். இதனால் ஒவ்வொருவரும் நான் எனது இறைவணக்கத்தை சரி செய்ய வேண்டும் என்ற சிந்தனை ஒவ்வொருவருக்கும் ஏற்படும். பிறகு எனது வேலை நன்றாக இருக்கிறது. எனது வியாபாரத்தில் வெற்றி கிடைக்கிறது. வருமானம் அதிகமாக வருகிறது என்றால், எனது முழு நம்பிக்கையும் இறைவன்பால் இருப்பதால்தான் நடக்கிறது என்று எண்ண வேண்டும்.

கடைசி வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்: ரிஸ்கை வழங்குபவன் அல்லாஹ் ஒருவனே ஆவான். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படுகிறது என்றால் அது அல்லாஹ்வின் அருளால்தான் ஏற்படுகிறது. இன்று ஊரில் நீங்கள் அடையாளம் கொண்டவர்களாக இருக்கின்றீர்கள் என்றால் அது அல்லாஹ்வின் காரணமாகத்தான் இருக்கின்றீர்கள். எனவே இறுதிக் காலகட்டத்தில் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளுங்கள். இதனால் உலக ஆசை, கேளிக்கை ஆகியவை உங்களை விட்டு விலகிவிடும். அவ்வாறு உங்களை விட்டு விலகவில்லையென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து உயிர், செல்வம், நேரம் ஆகியவற்றைத் தியாகம் செய்வேன் என்று உடன்படிக்கை எடுத்து விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை தனியாக விட்டுவிட்டோம் என்று பொருள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு ஜமாஅத்தை உருவாக்கி அதில் இணையுமாறு உங்களை கூறினார்கள் என்றால் எதனால் ஒரு ஜமாஅத்தை உருவாக்கினார்களோ அதை நாம் மறந்து விட்டோம் என்று பொருள். இறைவனோடு சிறப்பான தொடர்பை ஏற்படுத்தி, அல்லாஹ்வின் இபாதத் மற்றும் அவனை நினைவு கூர்ந்து நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வது, பிறகு இறைவனின் உரிமையையும் அவனது படைப்பினங்களின் உரிமையையும் வழங்க வேண்டும் என்ற வேலைக்காகத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள்.

நீங்கள் எந்த அளவுக்கு ஆகரீன்களில் அனுப்பப்பட்ட தூதராகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு உங்கள் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள். எவ்வளவு தூரம் அவர்களோடு செய்துள்ள

உடன்படிக்கையில் உண்மையாளர்களாக இருக்கிறோம் என்பதை சோதிப்பதற்காக ஜுமுஆவின் தொழுகைக்காக வருவதை இதற்கு ஒரு அளவுகோலாக ஆக்கியுள்ளார்கள். எனவே, ஜுமுஆவிற்காக பள்ளிக்கு வருவது அல்லது பள்ளிவாசல் இல்லையென்றால் சில அஹ்மதிகள் ஒன்றுகூடி ஓரிடத்தில் ஜுமுஆ தொழுவது மிகவும் முக்கியமான கடமையாகும். ரமலான் மாதத்தின் கடைசி ஜுமுஆவில் மட்டும் பெரும் எண்ணிக்கையை நாம் காட்டுவதற்குப் பள்ளிவாசலில் ஒன்று கூடுபவர்களாக இருக்கக் கூடாது. மாறாக, முழு வருடமும் நமது பள்ளிவாசல்களின் கொள்ளளவு நமக்கு குறைவாகி விட வேண்டும்.

ஜுமுஆவின் முக்கியத்துவம் தொடர்பான இன்னும் சில ஹதீஸ்களை நான் எடுத்து வைக்கிறேன். இதன் மூலம் ஜுமுஆவின் இன்னும் சில கட்டளைகளை நாம் தெரிந்து கொள்வோம்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ் மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் வெள்ளிக்கிழமையன்று ஜுமுஆ தொழுவது கடமையாகும். நோயாளி, பயணி, பெண், குழந்தை மற்றும் அடிமை ஆகியவர்களைத் தவிர மற்றவருக்கு இது கடமையாகும். வியாபாரம் அல்லது விளையாட்டு, கேளிக்கை ஆகியவற்றின் காரணமாக ஜுமுஆவில் கவனக் குறைவாக இருந்து விடுவார் எனில் அல்லாஹ்வும் அவரை கவனிக்காமல் விட்டு விடுவான். நிச்சயமாக இறைவன் தன்னிறைவு பெற்றவனும் புகழுக்குரியவனும் ஆவான் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இன்னொரு ஹதீஸில் இவ்வாறு வருகிறது. **ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

வெள்ளிக்கிழமை அன்று நன்மையின் கூலி பன்மடங்கு அதிகமாகி விடுகிறது என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எனவே வெள்ளிக்கிழமையின் போது ஜுமுஆவும் தொழுது பிற நன்மைகளையும் செய்தால் அல்லாஹ் அதற்கான நன்மைகளை பன்மடங்காக உயர்த்தி விடுகிறான். அல்லாஹ்வின் கட்டளையைப் பேணுவதை விட வேறு பெரிய நன்மை ஏதுமில்லை. அதுவும் மிக முக்கியமான கடமை அடங்கிய கட்டளையாக இருந்தால் அது இன்னும் பெரிய நன்மையாகும். வெள்ளிக்கிழமையன்று தொழுகைக்காக பள்ளிக்கு வருவது எல்லாவற்றையும் விட அதிக நன்மையைச் செய்வதற்கு காரணமாகி விடுகிறது. இதுவே ஒரு முனாஃபிக்கிற்கும் மூஃமினுக்கும் மத்தியில் பிரித்துக் காட்டக் கூடியதாகும்.

**ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.** அனாவசியமாக ஜுமுஆவை விடுகின்றவருடைய செயல் ஏட்டில் முனாஃபிக் என்று எழுதப்படும். அதை அழிக்கவும் முடியாது. மாற்றவும் முடியாது என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. **ஹஸ்ரத் அபூஸர் ஜம்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.** சோம்பேறித்தனத்தின் காரணமாக மூன்று ஜுமுஆவை தொடர்ந்து விடுபவரின் உள்ளத்தில் அல்லாஹ் முத்திரை வைத்து விடுகிறான் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இறைவன் முத்திரை பதித்து விட்டால் பிறகு நன்மைகள் செய்வதற்கான வாய்ப்பு குறைந்து கொண்டே செல்லும். இதன் காரணமாக மனிதன் அல்லாஹ்வை விட்டு மெல்ல மெல்ல விலகி விடுகிறான்.

**ஹஸ்ரத் சல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

வெள்ளிக்கிழமையின் போது குளித்து தன்னால் முடிந்த வரை தூய்மையைப் பேணி தலைக்கு எண்ணெய் வைத்து, வீட்டிலிருந்து நறுமணம் பூசிக் கொண்டு பள்ளிவாசலுக்கு வந்து இரண்டு பேரை

பிரிக்காமல் அதாவது ஸஃப்பில் உட்கார்ந்து இருக்கின்றவர்களை பிரித்து தாண்டிச் செல்லாமல், அவர் மீது வாஜிபான தொழுகையை தொழுவது இமாம் குத்பா கொடுக்க ஆரம்பித்தவுடன் அமைதியாக அதை கேட்பவருக்கு அந்த ஜுமுஆவிற்கும் அடுத்த ஜுமுஆவிற்கும் மத்தியிலுள்ள எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படும் என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. **ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஜுமுஆவின் போது வானவர்கள் பள்ளிவாசலில் நின்று கொள்கிறார்கள். முதலில் வருபவருடைய பெயரை முதலில் எழுதுகிறார்கள். முதலில் வருபவருடைய உதாரணம் ஒட்டகத்தை குர்பானி கொடுத்தவரின் (நன்மைக்கு) ஒப்பாவார். அடுத்ததாக வருபவர் ஒரு மாட்டை குர்பானி கொடுத்தவர் போன்று ஆவார். அதன் பிறகு ஒரு செம்மறி ஆடு, கோழி, முட்டை ஆகியவற்றை குர்பானி கொடுத்ததற்கு சமம் ஆவார்கள். அதன் பிறகு இமாம் மிம்பரில் வந்த பிறகு மலக்குகள தங்களது பதிவேட்டை மூடி விட்டு குத்பாவை கேட்க ஆரம்பித்து விடுகின்றார்கள் என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதில் குத்பாவைக் கவனமாகக் கேட்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் மலக்குகள் உட்கார்கின்ற மஜ்லிஸில் அதுவும் அவர்கள் அந்த உரையைக் கேட்டுக் கொண்டிருந்தால் அதை விட அருளுக்குரிய மஜ்லிஸ் வேறு எது?

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. **ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்:**

ஜுமுஆவில் இமாம் குத்பா கொடுக்கும் போது பேசுகின்றவரின் உதாரணம் புத்தகத்தை சுமந்து கொண்டிருக்கும் கழுதைக்கு ஒப்பானதாகும். அவ்வாறு பேசுகின்றவரை அமைதியாக இருக்குமாறு சொன்னால் அதற்கும் அபராதம் உண்டு.

அதாவது குத்பாவின் போது பேசுபவரை அமைதியாக இருக்கும்படி சொல்வதும் தவறு ஆகும். சின்னக்குழந்தை சப்தம் போட்டுக் கொண்டிருந்தால் அந்தக் குழந்தையை அங்கிருந்து தூக்கிச் சென்று விட வேண்டும். புரிந்து கொள்கின்ற தகுதியுடைய சிறுவர்கள் சப்தம் போட்டுப் பேசிக்கொண்டிருந்தால் அவர்களை சைகையின் மூலம் தடுக்க வேண்டும்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். சுலைக் அத்ஃபானி என்பவர் ஜுமுஆவின் போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குத்பா கொடுத்துக் கொண்டிருந்த சமயம் வந்து உட்கார்ந்தார். அப்போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், சுலைகே! எழுந்து நின்று இரண்டு ரக்அத் மிக சுருக்கமாக தொழு! என்று கூறினார்கள். பிறகு மக்களைப் பார்த்து, ஜுமுஆவின் போது இமாம் குத்பா கொடுத்துக் கொண்டிருக்கும் போது உங்களில் யாராவது வந்தால் அவர் இரண்டு ரக்அத்துகள் விரைவாகவும் சுருக்கமாவும் தொழ வேண்டும் என்று கூறினார்கள்.

**அல்குமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.**

நான் ஒரு முறை அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்களுடன் ஜுமுஆ தொழுவதற்காக சென்றேன். அப்போது எங்களுக்கு முன் மூன்று பேர் பள்ளிவாசலுக்கு வந்திருப்பதைப் பார்த்த பிறகு நான்காவதாக நான் (வந்துள்ளேன்) என்று கூறினார்கள். அதன் பிறகு நான்காவது வருவது ஒன்றும் தாமதம் இல்லை என்று கூறினார்கள். பிறகு மக்கள் கியாமத்தின் போது அல்லாஹ்வின் சன்னிதானத்தில் ஜுமுஆவில் வருகின்ற எண்ணிக்கையின் அடிப்படையில் உட்கார்ந்திருப்பார்கள். முதலில் வந்தவர் முதலிலும்,

இரண்டாமவர் இரண்டாவதாகவும், மூன்றாமவர் மூன்றாவதாகவும், நான்காமவர் நான்காவதாகவும் இருப்பார்கள். நான்காவது இருப்பவர் தூரம் ஒன்றும் இல்லை என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டேன் என்று கூறினார்கள்.

ஆக, ஜுமுஆவிற்கு இவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது.

**இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் சமுரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஜுமுஆ தொழுவதற்காக வாருங்கள். இமாமுக்குப் பக்கத்தில் உட்காருங்கள். ஜுமுஆவில் பின்னால் உட்கார்கின்ற ஒருவர் சொர்க்கத்திற்கு தகுதியுடையவராக இருந்த போதிலும் மெல்ல மெல்ல சொர்க்கத்திலிருந்து விலகி விடுகிறார்.

மனிதன் பல நன்மைகள் செய்தாலும் ஜுமுஆ தொழாத காரணத்தால் அவை வீணாகிவிடுகின்றன. பிறகு சொர்க்கத்திற்கு தகுதியாக இருந்த போதிலும் அந்த மனிதன் மெல்ல மெல்ல நரகத்திற்கு அருகில் சென்று விடுகிறான்.

ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. **ஹஸ்ரத் உபைத் பின் சபாத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.**

ஒரு வெள்ளிக்கிழமையன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், மக்களே! இன்றைய நாளை அல்லாஹ் பெருநாளாக ஆக்கியுள்ளான். எனவே நீங்கள் இந்த நாளன்று குளியுங்கள். நறுமணம் வைத்திருப்பவர் கண்டிப்பாக அதை பூசிக்கொள்ள வேண்டும். பல் தேய்க்க வேண்டும் என்றும் கூறினார்கள்.

ஆக, ஜுமுஆவிற்கு இருக்கின்ற இந்த முக்கியத்துவத்தை எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த நாளின் முக்கியத்துவத்தை இன்னொரு வடிவில் விளக்கியுள்ளார்கள். இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன்.....(5:4) என்ற வசனத்தை விளக்கியவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்.

இன்று நான் உங்ளுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன் (5:4) என்ற இந்த வசனம் இரண்டு பகுதியைக் கொண்டதாகும். ஒன்று, நான் உங்களை தூய்மைப்படுத்தி விட்டேன் என்றும், இரண்டாவது, இறைவன் தனது ஷரீஅத்தை முழுமைப்படுத்தி விட்டான் என்றும் இந்த வசனம் கூறுகிறது.

இந்த வசனம் இறங்கிய நாள் வெள்ளிக்கிழமையாக இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒரு யூதர், இந்த வசனம் இறங்கிய நாளை பெருநாளாக ஆக்க வேண்டும் என்று கூறினார். ஹதீஸின் சில அறிவிப்புகளில் யூதர், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறியதும், அதற்கு அந்த யூதர் பதில் கூறியதும் வந்துள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் அறிவிப்பும் இவ்வாறு காணப்படுகிறது. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அறிவிப்பை பொருத்த அளவில் ஒரு விஷயத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சில அறிவிப்புகளைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே நேரடியாக கூறியதாக எழுதுகிறார்கள். எனவே பல்வேறு அறிவிப்பாளர்கள் வாயிலாக நமக்கு கிடைத்ததை நாம் நம்புவதை விட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவதை தான் நாம் நம்ப வேண்டும். இதற்கு தான் அதிக முக்கியத்துவமும் மதிப்பும் வழங்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒரு யூதர், இந்த வசனம் இறங்கிய நாளை பெருநாளாக கொண்டாட வேண்டும் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வெள்ளிக்கிழமை பெருநாள் தான் என்று கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறினார்கள். ஆனால் பெரும்பான்மையாக மக்கள் இந்தப் பெருநாளை அறியாதவர்களாக உள்ளனர். பிற பெருநாட்களில் துணியை மாற்றுகிறார்கள். ஆனால் இந்தப் பெருநாளை பொருட்படுத்தாமல் அழுக்கான பழைய ஆடைகளை அணிந்து வருகிறார்கள். என் பார்வையில் இந்தப் பெருநாள் பிற பெருநாட்களை விட சிறந்ததாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

என் பார்வையில் இந்தப் பெருநாள் பிற பெருநாட்களை விட சிறந்ததாகும். இந்தப் பெருநாளுக்காக சூரா ஜுமுஆ இறங்கியுள்ளது. இதற்காகத்தான் தொழுகை கஸர் செய்யப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமையின் அஸர் நேரத்தில் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் பிறந்தார்கள். முதல் மனிதன் இந்தப் பெருநாளில் தான் பிறந்தான். திருக்குர்ஆனும் இந்த நாளில்தான் முழுமை அடைந்தது. அதாவது (5:4) வசனம் வெள்ளிக்கிழமை இறங்கியது.

மிகவும் மகத்துவம் வாய்ந்த மார்க்கத்தை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். இதை இறக்கி இறைவன் தனது மார்க்கத்தை முழுமைப்படுத்தினான். ஒரு யூதன் கூட இந்த வசனத்தின் மகத்துவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. மார்க்கத்தை முழுமைப்படுத்தி அதை திருக்குர்ஆன் வடிவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறக்கிய இறைவன் ஒரு முக்கியமான கடமையைச் செய்ய கட்டளையிட்டு நமக்கு கவனமூட்டியுள்ளான். இதை கடைபிடிப்பதில் ஒருபோதும் நாம் சோம்பேறித்தனம் காட்டாமல் இருப்பது நமது பொறுப்பாகும்.

நமக்கும் நமது சந்ததிகளுக்கும் ஜுமுஆவினை சிறப்பாக கடைபிடித்து வருவதற்கான நற்பாக்கியத்தை இறைவன் வழங்குவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்ப்பதன்படி நாம் செயல்படுவோமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 18.09.2009**

Translated by : **Maulavi S. ABDUL QADIR**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**